**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பகுதிகளை மீளக்கட்டியெழுப்புதல் செயற்திட்டம் - கூறு “சீ” - 2012**

---

**1. அபிப்பிராயம்**

--------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவு, இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டது என்றும்,

(இ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(ஈ) மானிய மற்றும் கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டச் செலவினம் ரூபா 7,891,486 ஆனதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 8,134,637,007 ஆகும். மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவறாான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பினை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| **பயன்பாடு** | | | |
| 'வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றஞ் செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள், கிரயத்தில் | (2,293,733) | 33,270,523 | 33,154,603 |
| மாற்றஞ் செய்யப்பட்ட பூர்த்தியான வேலைகள் | (11,183,542) | 54,417,380 | 7,122,198,101 |
| நிர்வாகக் கிரயம் | 21,211,102 | 20,794,442 | 277,129,238 |
| உசாத்துணைச் சேவைகள் | 157,659 | 25,321,009 | 702,155,065 |
| | 7,891,486 | 133,803,354 | 8,134,637,007 |

**2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு**

கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின்போது கட்டுநிதி நிதியக் கணக்கு ஒன்று செயற்படவில்லை.

**3. கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

2011 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் பிரதான நடவடிக்கைகள் பூர்த்தியாகி 2011 ஆம் ஆண்டில் உசாத்துணையாளர்களால் செயற்திட்டப் பூர்த்தி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதும், 2010 ஆம் ஆண்டில் பூர்த்தியாகிய நிர்மாண வேலைகளுக்குரிய நிறுத்தி வைத்த பணம் ரூபா 3,522,570 2012 டிசெம்பர் 31 அன்றும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

**4. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 நிதிப் பயன்பாடு**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு, மற்றும் நிதிப் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | மானிய/கடன் உடன்படிக்கைகளில் ஏற்பாடு செய்வதற்கு உடன்பட்ட தொகை | | 2001 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | பயன்படுத்தப்பட்ட நிதி | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2012 திசெம்பர் 31 வரை | |
| | ஐ அ டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ அ டொலர் மில் | ரூபா மில் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | | | | | | |
| - மானியம் | 55.2 | 5,531.4 | - | - | 59.8 | 6668.60 |
| - கடன் | 4.0 | 400.8 | - | - | 3.7 | 416.50 |
| இலங்கை அரசாங்கம் | 14.3 | 1,432.9 | 32.3 | 32.27 | 14.5 | 1034.87 |
| மொத்தம் | 73.5 | 7,365.1 | 32.3 | 32.27 | 78.0 | 8119.97* |

- ❖ சேர்ந்து நின்ற செலவினத்திற்கு மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடவடிக்கைகள் காரணமாக, அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட புள்ளி விபரங்களுடன் இது உடன்படாதுள்ளது.

## 4.2 பௌதீகச் செயலாற்றல்

2011 மார்ச் மாதத்தில் செயற்திட்ட உசாத்துணையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டப் பூர்த்தி அறிக்கையின் பிரகாரம், மாத்தறை மாவட்டத்தில் உள்ள 13.95 கிலோ மீட்டர் நீளமான நான்கு வீதிகளைத் தவிர, ஐந்து தேசிய வீதிகளையும் ஏனைய மாகாண வீதிகளையும் புனரமைப்பதற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் 2011 ஏப்ரல் மாதத்தில் பூர்த்தியாகியிருந்தன. போகஹவெவ – புல்மோட்டை வீதி, திருகோணமலை – புல்மோட்டை வீதி மற்றும் பேராதனை – பதுளை – செங்கலடி ஆகிய ஏனைய மூன்று வீதிகளில் வெள்ளத்தால் சேதமடைந்தவற்றிற்கான திருத்த வேலைகள் மீளாய்வாண்டின்போது ரூபா 53,682,521 கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவருதல்

ஆசிய அபிவிருத்தி வங்கியினது 2010 ஒக்டோபர் 20 ஆந் திகதிய கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டவாறு 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். 2011 மார்ச் 31 க்கு முன்னர் சகல தகுதிவாய்ந்த செலவினங்களும் கோரப்பட்டு பற்றுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 2011 மே மாதத்தில் உசாத் துணையாளர்களால் செயற்திட்டப் பூர்த்தி அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டக் காலப்பகுதி முடிவில் கணக்குகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அறிவுறுத்தல்களை செயற்திட்டத்தின் முகவராகிய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு வழங்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டக் கண்காணிப்புக் கூறினது அலுவலகத்தினது நடவடிக்கைகள் 2012 ஜூலை 30 வரை தொடரப்பட்டிருந்தன. நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், அக்காலப்பகுதியில் ரூபா 986,192 திறைசேரியிலிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து ஊதியமாக வழங்கப்பட்டிருந்தது.